4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 62/2022 நாள்: 20.08.2025 ம.சா.1 – உமாமகேஷ்வரி**

**1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் வராததால் அவர்கள் தரப்பில் யாரும் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்யாததால் மேற்படி எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -

விபத்தில் இறந்து போனது எனது கணவர், அவரது பெயர் ரமேஷ் குமார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆனால் விபத்தின் போது உடனிருந்தவர்கள் சொல்லி எனக்கு தெரியும். விபத்து மடத்துக்குளம் செக்போஷ்ட்டில் நடந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி செக்போஷ்ட்டில் வாகனங்களை சோதனை செய்வதற்காக 3 பேரியர் கார்டுகள் அமைக்கப்பட்டிருக்கும் அதனருகில் போலிசார் எப்போதும் இருப்பார்கள் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் ரமேஷ் குமார், சதிஷ்குமார் என்பவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தில் பின்னால் இருந்து பயணம் செய்துள்ளார் என்றால் சரிதான்.மேற்படி சதிஷ்குமாருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்து என்பதை காட்டுவதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் ஓட்டுநர் உரிம ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் விபத்து சமயத்தில் எனது கணவரும், மேற்படி சதிஷ்குமாரும், தகுந்த பாதுகாப்பு தலைக்கவசம் அணியாமல் பயணம் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எனது கணவரும்,

சதிஷ்குமாரும் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியாததால் தலையில் காயம் ஏற்பட்டு இறந்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் பயணம் செய்து வந்த இரு சக்கர வாகனத்திற்கான தகுதிச்சான்று விபத்து சமயத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் எனது கணவர் பயணம் செய்து வந்த இரு சக்கர வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லை என்று தெரிவித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்ற சதிஷ்குமாரும், எனது கணவரும் மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதியை மீறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த சதிஷ்குமார் தான் முன்னால் இருந்த பேரியர் கார்டை இருப்பதை கவனிக்காமல் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்து பேரியர் கார்டு மீது மோதி கீழே விழுந்தார்கள் என்றும், பின்னால் வந்த லாரி அவர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு மேற்படி சதிஷ்குமாரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. 2வது எதிர்மனுதாரர் வாகனமானது பெரிய வாகனம் என்பதாலும், எனது கணவருக்கும் மேற்படி சதிஷ்குமாருக்கும் இழப்பீடு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தவறாக 1வது எதிர்மனுதாரர் மீது குற்ற வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை விற்றும், பால் வியாபாரம் மற்றும் விவசாயம் செய்தும் மாதம் ரூ.1லட்சம் வருமானம் ஈட்டினார் என்று சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருமானத்தை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆடு, மாடு, கோழியை நான் தான் தற்போது பராமரித்து வருகிறேன். எனது கணவர் விவசாயம் செய்து வந்த நிலத்தை தற்போது நான் தான் விவசாயம் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் செய்த தொழிலை நான் தொடர்ந்து செய்வதாலும், விவசாயத்தை நான்

தொடர்ந்து செய்து வருவதாலும், எனது கணவர் இறப்பால் எங்களுக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் வருமான வரி செலுத்துகிறாரா என்றால் வருமான வரி செலுத்தவில்லை. நான் அதிக இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் எனது கணவரின் வருமானத்தை அதிகப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு சதிஷ்குமார் காரணம் என்பதாலும், எனது கணவர் சதிஷ்குமார் ஓட்டி சென்ற வாகனத்தில் கவனக்குறைவாக பயணம் செய்த காரணத்தினாலும், 3ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. எனது கணவரின் வயதை குறிப்பிடும் வகையில் ஆதார் கார்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் தகுதிச்சான்றிதழை ஆய்வின் போது முன்னிலைப்படுத்தவில்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிட்டு அபராதம் வித்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.